**கவனிக்க**.- 06.02.2026 ஆந் திகதிய 2475 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2476 - 2026 පෙබරවාරි මස 13 වැනි සිකුරාදා - 2026.02.13

2476 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 334 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 342 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, மாச்சு மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோறாள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

331 - B 82763- 403 (2026/02)

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### முஸ்லிம்/ மேலதிக முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி – களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம்/மேலதிக முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாற்றும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் 65 வயது தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும் அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

6. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் / தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்திகள் உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு பாடம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு பாடமாக கருதப்படல் வேண்டும். அந்த பாடப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அந்தப் பாடம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

7. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவுக்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

9. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர், (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, மாச்சு மாதம் 13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

ச. ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, சனவரி 27.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| களுத்துறை | பேருவைள | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவின் மிஹிரிபென்ன பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பேருவைள | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவின் பேருவளை பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பேருவைள | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவின் மக்கோனபத்த பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பேருவைள | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவின் மிஹிரிபென்ன பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பேருவைள | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவின் தர்கா பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பாலிந்த நுவர | பஸ்துன்கோறள கிழக்கு பிரிவின் பெலன பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பாணந்துறை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவின் தொடவத்தை பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பாணந்துறை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவின் எழுவில பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பாணந்துறை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவின் ஹேனமுல்ல பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |

02-184

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி – களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாற்றும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் 65 வயது தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

6. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

7. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

9. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, மாச்சு மாதம் 13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

ச. ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, பெப்புருவரி 02.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| களுத்துறை | தொடன்கொடை | தொடன்கொடை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பஸ்துன் கோறளை மேற்கு பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | இங்கிரிய | இங்கிரிய 1 பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் றைகம் கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | புலத்சிங்கள | வரகாகொட பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பஸ்துன் கோறளை கிழக்கு பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | வலள்ளாகம | மீகஹதென்ன பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பஸ்துன் கோறளை கிழக்கு பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | களுத்துறை | களுத்துறை நகர பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பாணந்துறை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொடமுனை பிரிவின் மேலதிக விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |

02-185

---

## இலங்கைப் பாராளுமன்றம்

வெற்றிடங்கள்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட் தொகுதியில் வெற்றிடமாகவுள்ள பிரதிப் பணிப்பாளர் (நிதி) பதவிக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ் காணப்படும் மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், கல்வி/ தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2026.03.03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில், “பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே” எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். (இந்த விளம்பரத்தினை www.parliament.lk எனும் இணையத் தளத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்).

**பிரதிப் பணிப்பாளர் (நிதி) - வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01**

1. ***சம்பள அளவுத்திட்டம் :***

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 109,090 - 7 x 2,940 - 6 x 3,900 - ரூபா 153,070.00 ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த

சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப மொத்த மாதாந்தச் சம்பளம் ரூ. 197,000.00 ஆகும்.) [மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், 2027 ஆம் ஆண்டு தொடர்பாக மேலும் சம்பளத் திருத்தத்தைச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது].

2. **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

3. **கல்வித் தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்பட்ட வர்த்தகம், முகாமைத்துவம் அல்லது கணக்கியல் துறையிலான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

4. **தொழில்சார் தகைமைகள்:**

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தினால்/ இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் (SLIDA) வழங்கப்பட்ட நிதி முகாமைத்துவம்/ கணக்கீடு/பெறுகை ஆகிய துறைகளில் முதுமாணிப் பட்டம் பெற்றிருப்பது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(ஆ) நிதி அமைச்சு / இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் (SLIDA) நடாத்தப்படும் CIGAS மற்றும் ITMIS கணினி நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

5. **அனுபவம்:**

இலங்கை கணக்காளர் சேவையின் III/II ஆம் தரங்களில் மொத்தமாக பன்னிரண்டு (12) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைக் பூர்த்திசெய்திருத்தல். (பெறுகை ஏற்பாட்டு நடைமுறையில் (Procurement) அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

6. **ஆட்சேர்ப்பு முறை :**

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் திறன்களின் பிரகாரம்.

7. **பரீட்சை நடபடிமுறை :**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின்போது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். இது தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100) ஆகும்.

| *தொடர் இலக்கம்* | *அளவுகோல்கள்* |
|---|---|
| 1 | மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | தொழில் அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |

8. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடைய இந்தப் பதவிக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் ஆரம்பத்தில் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாக நியமிக்கப்படுவார்கள். அரசாங்க சேவையிலோ அல்லது மாகாண அரசாங்க சேவையிலோ நிரந்தரமான ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றில் சேவையாற்றிய விண்ணப்பதாரரொருவர் அல்லது பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒரு விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் ஒரு (01) வருட பதிற் கடமை காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார்.

(ii) நியமனங்கள் செயல்வலுப் பெறும் திகதியும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாதிருப்பதற்கு பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பதவியணிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படுகின்ற விகிதாசாரத்திற்கு அமைய விதவைகள் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு தமது சம்பளத்திலிருந்து பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.
(vi) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

9. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன், மூலப் பிரதிகளைக் கோரும் பட்சத்தில் அவற்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) தேசிய அடையாள அட்டையின் பிரதி
(இ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
(ஈ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
(உ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

10. அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தொடர்புடைய திணைக்கள / நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

11. பதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் ஏதேனுமொரு வகையில் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகுதியின்மைக்கு வழிவகுக்கும்.

12. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானதென்று ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் கண்டறியப்படுமிடத்து, அவர் தகுதியற்றவரென குறிப்பிடப்படுவதற்கும், நியமிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்படுமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் அது காரணமாக அமையும்.

13. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படாத (தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் சேவை செய்பவராயின்) அல்லது பதவிக்கான மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் மொழிகளுக்கிடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

குஷானி ரோஹணதீர
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.
2026, பெப்புருவரி 06.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கைப் பாராளுமன்றம்**

.................................................................................................... பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) : ........................................................................
(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) : ..........................................................
(இ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): (திரு/திருமதி/செல்வி)........................................

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3. (அ) (i) தனிப்பட்ட முகவரி : ....................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................

(ii) மின்னஞ்சல் முகவரி (e-mail) : .........................................................................

(iii) தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(iv) WhatsApp தொலைபேசி இலக்கம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ஆ) (i) அலுவலக முகவரி : .......................................................................................................................
.............................................................................................................................................................
..........................................................................................................................

(ii) தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(இ) பரீட்சைக்கான அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரியை தயவுசெய்து குறிப்பிடுக.

தனிப்பட்ட : ☐ அலுவலக : ☐

4. (அ) பிறந்த திகதி : ஆண்டு.............. மாதம்.............. திகதி...............

(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள்....... மாதங்கள்:............ நாட்கள் :................

5. சிவில் அந்தஸ்து (விவாகமானவர்/விவாகமாகாதவர்): .........................................................................

6. பால் (ஆண்/பெண்) : ..............................................................................

7. இலங்கைப் பிரசையா : (ஆம்/இல்லை)

8. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *பட்டம்* | *நிறுவனம்* | *செயல்வலுப் பெறும் திகதி* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

9. தொழில்சார் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *பாடநெறி* | *நிறுவனம்* | *செயல்வலுப்பெறும் திகதி (Effective date)* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10. அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *நிறுவனம்* | *பதவி* | *சேவைக் காலம்* |
|---|---|---|
| | | |
| | | |

தற்போதைய தொழில் பற்றிய விபரங்கள் (சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்படுதல் வேண்டும்)

(அ) நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி : ..........................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி : ..............................................................................

(இ) தற்போது வகிக்கும் பதவி : ..............................................................................

(ஈ) மாதாந்த அடிப்படைச் சம்பளம் : ..............................................................................

(உ) கொடுப்பனவுகள் : ..............................................................................

(ஊ) முழுமொத்த சம்பளம் : ..............................................................................

11. நீங்கள் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா? (ஆம் / இல்லை)

அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக : ..............................................................................................
..............................................................................................................................................................................

12. இதற்கு முன்னர் அரசாங்கத்தின் கீழ் பணியாற்றியுள்ளீர்களா? (ஆம் / இல்லை)

அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக : ..............................................................................................
..............................................................................................................................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் பொய்யானது அல்லது தவறானது என நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால், இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்றும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்றும் நன்கறிவேன்.

திகதி: ..................................

.............................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

**திணைக்கள/ நிறுவனத் தலைவரின் விதப்புரை**

**(அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்.)**

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்களுக்கு,

இந்த நிறுவனத்தில் ........................................................................................................................ பதவியை வகிக்கின்ற திரு./திருமதி/செல்வி ........................................................................................ அவர்களின் விண்ணப்பத்தை விதப்புரை செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் உரிய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் / நிரந்தரமாக்கப்படவில்லை எனவும், இவரின் வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது எனவும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் உறுதி செய்கின்றேன். இவர் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவாராயின், இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. (தயவு செய்து பொருத்தமற்ற சொற்களை வெட்டி விடவும்.)

திகதி: ......................................

.....................................................

திணைக்கள / நிறுவனத்
தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை)

2-159

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**இணைந்த சாரதிகள் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

01. இணைந்த சாரதிகள் சேவையின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் 2026, மே மாதம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அதற்கான விண் ணப்பப்படிவங்கள் இலங்கை பரீட்சைத் திணைக் களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க முடிவது நிகழ்நிலை (Online) முறையினூடாக மட்டுமேயாகும். விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2026.03.16 ஆந் திகதி ஆகும்.

குறிப்பு - நிகழ்நிலையினூடாக விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்வது 2026.02.16 ஆந் தினம் மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதுடன் 2026.03.16 ஆந் தினம் பி.ப 9.00 மணிக்கு முடிவடையும்.

இப்பரீட்சையானது அட்டவணை - II இல் குறிப்பிடப் பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படும் சகல விண் ணப்பதாரர்களும் அவ் அட்டவணையின் பிரகாரம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தைத் தெரிவு செய்தல் வேண்டும் என்பதுடன், நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம் மற்றும் அதற்குரிய நகர இலக்கம் என்பவற்றை அட்டவணை - II இன் பிரகாரம் சரியாகக் குறிப்பிடல் வேண்டும்.

02. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் திறமை அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாவட்ட சனத்தொகை விகிதாசாரத்தின் அடிப்படையில் இணைந்த சாரதிகள் சேவையின் தரம் III பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கு கவனம் செலுத்துவதற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படுவார்கள்.

03.

(அ) நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையையோ அல்லது அனைத்து வெற்றிடங்களையுமோ நிரப்பாதிருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

(ஆ) அரசாங்க சேவை நியமனங்கள் நிர்வகிக்கப்படும் பொது நிபந்தனைளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2467/75 மற்றும் 2025.12.19 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திருத்தங்களுக்கு உட்பட்டு இலக்கம் 1875/39 மற்றும் 2014.08.15 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இணைந்த சாரதிகள் சேவைப் பிரமாணக்குறிப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக்குறிப்பில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பிறகு செய்யப்படும் திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணக்குறிப்பின் ஏற்பாடுகளுக்கும் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்குவிதிகளுக்கும் உட்பட்டு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் இணைந்த சாரதிகள் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவார்.

(இ) நியமனத்திற்காக தெரிவு செய்யபடின், முதலாவதாக நியமனம் பெற்ற சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும், நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விசேட காரணங்களின் அடிப்படையில் அக்காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரை இடமாற்றுவதற்கு அவசியமாயின், நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உள்ளது.

(ஈ) இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். இணைந்த சாரதிகள் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருடங்களுக்குள் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(உ) நியமனத்திற்காக தெரிவு செய்யப்படின் நீங்கள் நியமனம் பெறுவதற்கு தகைமையை பூர்த்தி செய்த மொழியின்படி 2020.10.16 ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி தங்களால் உரியபடி அரசகரும மொழித் தேர்ச்சியைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(ஊ) நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் சேவையின் தேவைப் பாட்டிற்கு இணங்க சாதாரண கடமை நேரத்திற்குப் புறம்பாகவெனினும் கடமையாற்ற வேண்டும் என்பதுடன், சேவையின் தேவைப் பாட்டிற்கு இணங்க செய்யப்படும் உடனடி அறிவித்தலுக்கு தொடர்ந்து சில நாட்களாயினும் அலுவலகத்திற்கு வெளியில் இருக்கத்தக்கதாக உள்ள வசதிகளின் கீழ் கடமையாற்றுவதற்கு உட்பட்டவர்கள் என்பதையும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

உதாரணங்கள் -

i. அத்தியாவசிய சேவைகளைப் பேணிச் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களிலும் கடமையாற்றுதல்.
ii. கடமைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் பல்வேறு வகைப்பட்ட வாகனங்கள் மற்றும் பார வாகனங்களைச் செலுத்துதல்.
iii. தூர இடங்களுக்கான கடமைத் தேவைகளின் போது குறைந்தபட்ச வசதிகளின் கீழ் வழங்கப்படும் தங்குமிட வசதிகளின் கீழ் கடமையாற்றுதல்.
iv. பல நாட்களாக தொடர்ச்சியாகக் கடமை நிலையத்திலிருந்து புறம்பாகத் தங்கியிருந்து கடமைகளை மேற்கொள்ளுதல்.

04. 2025.03.25 ஆம் திகதிய 10/2025 இனைக் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் சம்பள குறியீடு PL 03-2025 இவ் பதவிக்கு உரித்தாவதுடன் அதற்குரிய சம்பள அளவுத்திட்டம் ரூ. 42,780.00 - 10 x 490 - 11 x 540 - 10 x 590 - 12 x 630 – 66,540.00 என்பதாகும். நியமனத்திற்காக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரரொருவருக்கு அச்சம்பளத்திற்கு உரித்தாவது 2027.01.01 ஆம் தினத்திலிருந்தாகும் என்பதுடன் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் தினத்திலிருந்து இச்சுற்றறிக்கையின் அட்டவணை III இன் ஏற்பாடுகளின்படி சம்பளம் செலுத்தப்படும்.

05. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உரித்துடைய தாகும்.

06. **தகைமைகள்** :

6.1 **கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு குறைந்தபட்சம் சிங்களம்/தமிழ் மொழிகளுக்கு சித்தியுடன் ஆறு பாடங்களில் இரு திறமை சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

i. மேலே சித்தி பெற்றிருக்க வேண்டிய மொழியாகக் கருதப்படுவது, விண்ணப்பதாரர் இப் போட்டிப் பரீட்சைக்காக தோற்றும் மொழி மூலமாகும்.

ii. கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சைக்குச் சமமான, ஏனைய உள்நாட்டு அல்லது வெளிநாட்டு கல்வி நிறுவனங்களினால் நடாத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றிப் பெற்றுள்ள தகைமையொன்றினை நியமனம் வழங்குவதற்காக உரித்தாக்கிக் கொள்வது தொடர்பான இறுதித் தீர்மானம், உரிய கல்வி நிறுவனங்கள் மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்திடமிருந்து உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.

6.2 **தொழிற் தகைமைகள் :**

மோட்டார் கார்கள் மற்றும் இரட்டைத் தேவைப் பாட்டு வாகனங்களைச் செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட பழைய சாரதி அனுமதிப்பத்திர வகுப்பின் பிரகாரம் குறைந்த பட்சம் ‘சி’ மற்றும் ‘சி1’ வாகன வகுப்பிற்கான செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரமோ அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும் திகதிக்கு 03 வருடங்களுக்கு முன்னர் பெறப்பட்ட குறைந்தபட்சம் ‘பி’ வகுப்பிற்கான செல்லுபடி யாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொண் டிருத்தல் வேண்டும்.

6.3 **அனுபவம்:**

வாகன சாரதியாக சாரதி அனுமதிப் பத்திரத்தினைப் பெற்ற திகதிக்கு பின்னர் மூன்று வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (அனுபவமானது சான்றிதழ்களின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

6.4 **உடல் தகைமைகள் :**

i. ஆகக்குறைந்த உயரம் 05 அடியாக இருத்தல் வேண்டும்.

ii. பகல் வேளைகளிலும் இரவு வேளை களிலும் சேவையில் ஈடுபடுவதற்கு உடல் ரீதியான தகைமைகளை பெற் றிருக்க வேண்டியதோடு, போதிய கண் பார்வையினையும் கொண்டிருத்தல் வேண்டும். அரசாங்க வைத்திய அலுவலர் ஒருவரினால் வழங்கப்பட்ட முறையான சான்றிதழ் ஒன்றின் மூலம் அது தொடர் பாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

6.5 **ஏனைய தகைமைகள் :**

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையா மலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய, 2008.03.16 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ 1981.03.16 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்தவர்கள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையுண்டு.)

**குறிப்பு:** தற்போதும் அரசாங்க சேவையில் சேவையாற்றும் நிரந்தர மற்றும் ஓய்வூதியம் உரித்துடைய நியமனதாரிகளுக்கு அதி கூடிய வயதெல்லை கருத்தில் கொள்ளப் படமாட்டாது.

(இ) விண்ணப்பதாரி நன்நடத்தையுடைய வராக விருத்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்று வதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**கவனிக்கவும்** - ஒவ்வொரு விண்ணப்ப தாரரும் பதவிக்குரிய அனைத்துத் தகைமைகளையும் 2026.03.16 ஆந் திகதி யன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்திருப்பது கட்டாயமாகும்.

07. மாவட்ட மக்கள் தொகை விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்தல்

மாவட்டப் பெயர்பட்டியல், அட்டவணை - I இல் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களினால் தாம் வெற்றிடங்களுக்காகப் போட்டியிடத் தெரிவு செய்யும் மாவட்டத்தையும் அதன் இலக்கத்தையும் அட்டவணை - I இன் படி நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது சரியாகக் குறிப்பிடல் வேண்டும்.

(அ) சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் பிரதிநிதித்துவ அடிப்படையில் அமையும் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தினதும் சனத்தொகை விகிதாசாரத்திற் கமைய, அவ் அவ் மாவட்டங்களுக்காக வெற் றிடங்களின் எண்ணிக்கையிலிருந்து குறித்த எண்ணிக்கையானது ஒதுக்கப்படும் சனத் தொகை விகிதாசாரத்திற்கமைய ஏதேனும் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங் களின் எண்ணிக்கைக்காக போட்டியிடுவதற்கு அவ் மாவட்டத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தகைமையுடைய வர்களாவார்கள்.

I. ஒரு மாவட்டத்திற்கு மேலே குறிப்பிட்டவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக் கையை அவ் மாவட்டத்திற்காக விண்ணப் பித்துத் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களினால் நிரப்ப முடியாத சந்தர்ப்பங்களில், அவ் வெற்றிடங்களின் எண்ணிக்கையானது அயலிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் இடையில் அம் மாவட்டங் களின் சனத்தொகை விகிதாசாரத்திற்கமைய மீண்டும் பகிர்ந்தளிக்கப்படும்.

II. நிரப்புவதற்கு நியமிக்கப்பட்டுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பின், அக் காரணத்தின் அடிப்படையில் மாவட்டச் சனத்தொகை அடிப்படையை உரித்தாக்கி கொள்ள முடியாதவிடத்து, திறமை ஒழுங்குவரிசையில் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

III. பரீட்சையில் தேவையான குறைந்தபட்சப் புள்ளிகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கை ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக் கையைவிடக் குறையும் போது மாவட்டச் சனத்தொகை அடிப்படையில் தெரிவு செய்தல் இடம்பெற மாட்டாது.

**கவனிக்கவும்:** மாவட்டமொன்றிற்கு ஒதுக்கப் பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை என பொருள்கொள்வது, அவ் நிர்வாக மாவட்டத்தின் சனத்தொகை விகிதாசாரத்திற்கமைய அம் மாவட்டத்திலிருந்து போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களுக்காக ஒதுக் கப்படும் வெற்றிடங்களின் அளவாகும் என்பதுடன், அவ் நிர்வாக மாவட்டத்திற்குள் நிலவும் அரசாங்க நிறுவனங்களில் உள்ள இணைந்த சாரதிகள் சேவையின் வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்ல என்பது கவனிக்கத்தக்கது எனவே, ஏதேனும் மாவட்டத்தைப் போட்டியிடுவதற்காகத் தெரிவு செய்த மாத்திரத்தில், அம் மாவட்டத்தின் அரசாங்க நிறுவனமொன்றிலுள்ள வெற்றிடத் திற்கு உரிமை கோருவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் உரிமையில்லை.

(ஆ) மாவட்டத்திற்கு உரியவராகுவதற்கு இருக்க வேண்டிய தகைமைகள் – மாவட்டமொன்றிற்கு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களுக்காகப் போட்டி யிடுவதாயின், பின்வரும் விடயங்களில் ஒன்றை யேனும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. விண்ணப்பதாரர் அம் மாவட்டத்திற்குள் பிறந்தவராக இருத்தல் வேண்டும்;

அவ்வாறு இல்லையெனில்

II. பரீட்சைக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னைய ஐந்து (05) வருடங்களுக்குள், அவர் அம் மாவட்டத்திற்குள் குறைந்தது மூன்று (03) வருடங்களாவது தொடர்ச்சியாக நிரந்தரமாக வசித்தவராக இருத்தல் வேண்டும்;

அவ்வாறு இல்லையெனில்

III. அவர் தொடர்ச்சியாக 05 வருடங்கள் அம் மாவட்டத்தில் தனது இரண்டாம் நிலைப் பாடசாலைக் கல்வியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு -

1. எழுத்துப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், நேர்முகப் பரீட்சையின் போது அல்லது கோரப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்படி மாவட்டத்திற்குரியவர் என்பதை உறுதிப்படுத்தும் பின்வரும் ஆவணங் களை தேவையான பிரகாரம் சமர்ப்பிப் பதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

I. பிறப்புச் சான்றிதழ்;

II. கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் மற்றும் மூன்று (03) வருட காலத் தொடர்ச்சியான வதிவிடத்தை

உறுதிப்படுத்தும் வாக்காளர் பெயர் பட்டியல்கள்

III. பாடசாலை விடுகைப்பத்திரம்

2. ஏதேனும் விண்ணப்பதாரரொருவரின் தந்தை அல்லது தாய், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றில் இடமாற்றம் செய்யப்படக்கூடிய சேவையில் கடமையாற்றுபவராக இருப்பின், அவ் விண்ணப்பதாரர், தனது தந்தையினது அல்லது தாயினது பிறப்பிடத்தைத் தான் சார்ந்த மாவட்டமாகத் தெரிவு செய்வதற்கு அனுமதி வழங்கப்படும். (அதற்காக விண்ணப்பதாரர் தனது பெற்றோரின் பிறப்பிடம் மற்றும் அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றில் கடமையாற்றுவதையும் உறுதிப்படுத்துவதற்கான உரிய ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின் போது அல்லது கோரப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமர்ப்பித்தல் வேண்டும்).

3. எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களின் வெற்றிடங்களுக் காகப் போட்டியிட அனுமதிக்கப்படமாட்டார் கள். நிகழ்நிலையின் மூலம் விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிக்கும் போது மேலே 07 (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கமைய, தாம் வெற்றிடங்களுக்காகப் போட்டியிட வேண்டிய மாவட்டத்தைத் தெரிவு செய்த பின்னர் அதனை மீண்டும் மாற்ற முடியாது.

08. **பரீட்சை நடைமுறை:**

(அ) இப்பரீட்சையானது, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும் விண்ணப்பதாரி யொருவர் தனக்குரிய ஒரு மொழியைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குரிய அனைத்து வினாத்தாள்களுக்கும் அவ் மொழி யிலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப் பிக்கும் மொழியைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சை வினாத் தாள்கள் இரண்டினைக் கொண்டதாகும்.

| | | *புள்ளிகள்* | *காலம்* |
|---|---|---|---|
| 01 | நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 01 மணித்தியாலம் |
| 02 | பொது வினாத்தாள் | 100 | 01 மணித்தியாலம் |

(01) **நுண்ணறிவுப் பரீட்சை:**

இவ் வினாத்தாளானது 01 மணித்தியாளத்துக்குள் விடையளிக்கக்கூடிய 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரமொன்று வழங்கப்படு வதுடன், வினாத்தாளுக்கான மொத்தப் புள்ளிகள் 100 இல் சித்தியடைவதற்கு குறைந்தபட்சம் 40 புள்ளிகள் அல்லது 40 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

(02) **பொது வினாத்தாள்:**

இங்கு பரீட்சார்த்திகளின் பொது அறிவு, வீதி விதிகள், வீதி சமிக்ஞைகள் மற்றும் மோட்டார் பொறிமுறையியல் பற்றிய அறிவு பரீட்சிப்பதற்கு பல்தேர்வு மற்றும் குறுகிய விடைகள் எதிர்ப் பார்க்கப்பட்ட 01 மணித்தியால வினாப் பத்திரமொன்று வழங்கப்படுவதுடன், வினாப் பத்திரத்துக்கான மொத்தப் புள்ளிகளான 100 இல் சித்தியடைவதற்காக குறைந்தபட்சம் 40 புள்ளிகள் அல்லது 40 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

**குறிப்பு** : கடமை நடவடிக்கைகளுக்காக பரீட் சார்த்திகளின் தகைமைகள் மற்றும் திறன்களை பரீட்சிப்பதற்காக இவ் வினாத்தாள்கள் தயாரிக்கப் படும்.

பரீட்சை பெறுபேறுகள் - மொத்த எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்ற புள்ளிகள் - புள்ளிகள் குறிப்பிட்ட பெறுபேற்றுப் பட்டியலொன்றை பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக் களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. **நேர்முகப் பரீட்சை:**

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவதற்கு மேற்படி இரண்டு வினாத்தாள்களிலும் ஒவ்வொரு வினாத் தாளுக்கும் 40 புள்ளிகளை அல்லது 40 இற்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும். அதன் பிரகாரம், நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின்படி மாவட்டச் சனத்தொகை விகிதாசார அடிப்படையில் எழுத்துப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் தொழிற்பரீட்சை மற்றும் பொது நேர்முகப்பரீட்சைக்காகத் தகைமை பெறுவர்.

i. எழுத்துப் பரீட்சைக்கான இரண்டு பாடங்களிலும் குறைந்தபட்ச சித்திப் புள்ளிகளைத் தாண்டிய மற்றும் இரண்டு பாடங்களுக்குமான மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில், ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் அறிவித்தலின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் ஒதுக்கப்பட்டுள்ள வெற் றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தயாரிக்

கப்பட்ட திறமை ஒழுங்குவரிசையை கண்டிப்பாக கவனத்தில் கொண்டு விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

ii. நேர்முகப் பரீட்சையானது இரு வகைப்படும்

1) பொது நேர்முகப்பரீட்சை - விண்ணப்ப தாரர்கள் நியமனம் பெறுவதற்காக அறிவித்தலின் 06 மற்றும் 07 ஆம் பிரிவுகளின் பிரகாரம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனரா என்பது இங்கு பரிசோதிக்கப்படும்.

2) தொழிற் தகைமைப் பரீட்சை - தொழிற் தகைமைப் பரீட்சைக்காக 20 புள்ளிகள் வழங்கப்படுவதுடன் அதில் சித்தி யடைவதற்கு குறைந்தபட்சம் 10 புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். இதில் வீதி சட்டங்கள் பற்றிய அறிவும் மற்றும் மோட்டார் பொறிமுறையியல் பற்றிய அடிப்படை அறிவின் நடைமுறைப் பயன்பாடு உள்ளிட்ட வாகனத்தை செலுத்தும் தேர்ச்சி பரிசோதிக்கப்படும்.

iii. பொது மற்றும் தொழிற்றகைமைப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரமே நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படுவர்.

iv. தொழிற்றகைமைப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகள் எழுத்துப் பரீட்சையின் புள்ளிகளுடன் சேர்க்கப்படமாட்டாது.

10. **நியமனமொன்றுக்காக தெரிவு செய்தல் :**

அறிவித்தலின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங் களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, எழுத்துப் பரீட்சையின் புள்ளிகளின் பிரகாரம் திறமை ஒழுங்குவரிசைக்கு பொது மற்றும் தொழிற்றகைமைப் பரீட்சைகளுக்கு அழைத்து, அதன் மூலம் சித்தியடையும் விண்ணப்பதாரர்களை இணைந்த சாரதிகள் சேவையின் தரம் III இல் நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படுவர்.

11. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்ட னைகள் :**

i. விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது மிகவும் கவனமாகவும், சரியாகவும் தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்ட திட்டங்களின் பிரகாரம் எவரேனும் ஒரு விண் ணப்பதாரர் தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனத் தெரிய வருமிடத்து, பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய விண்ணப்பதாரி என்ற தகுதியை இரத்துச் செய்ய முடியும்.

ii. விண்ணப்பதாரரொருவரினால் சமர்ப்பிக்கப் பட்ட தகவல்கள் பின்னரான காலத்தில் தவறான தென தெரியவருமிடத்து அல்லது அவரினால் வேண்டுமென்றே ஏதேனும் விடயத்தினை மறைத்துள்ளவிடத்து அல்லது அவருக்கு தொடர்ந்தும் நியமனம் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாததுடன் அவ் பரீட்சையினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ள நியமனமொன்றினை இரத்துச் செய்வதற்கு அல்லது அரசாங்க சேவை யிலிருந்து அகற்றுவதற்கும் நேரிடும்.

12. **பரீட்சை நிபந்தனைகள் :**

(i) நிகழ்நிலை (online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் பூர்த்தி செய்தல் வேண்டும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்காக விண்ணப் பிப்பதற்காக தயாரித்துள்ள பொது ஆலோ சனை பத்திரத்தினை (Common Instructions) தரவிறக்கம் செய்து, வாசித்து, விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்யும் போது அவ் ஆலோசனைகளை கடுமையாக பின்பற்றுதல் வேண்டும். பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலையினூடாக சமர்ப்பிக்கப்படும் மென்பிரதியின் செல்லுபடி யான பிரதியொன்றை இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் ஏற்கப்பட்டதாக/ ஏற்கப்பட வில்லையென கட்டமைப்பிற்குள் உள்நுழைய பயன்படுத்தும் கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவலொன்றின் (SMS) ஊடாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலமாகவோ அறிவிக்கப்படும்.

(ii) பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது நிகழ்நிலை கட்டமைப்பினூடாக வழங்கப்படும் கீழ்வரும் கட்டண செலுத்துகை முறையின் கீழ் மட்டும் கொடுப்பனவினை செய்தல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கியினதும் கடனட்டை மூலம் (Any Bank Credit Card)

ii. எந்தவொரு வங்கியினதும் செலவட்டை மூலம் (Any Bank Debit Card)

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமையின் மூலம் (Bank of Ceylon Online Banking Method)

iv. எந்தவொரு இலங்கை வங்கியின் கிளைகளினூடாகவும் (Bank of Ceylon Teller Slip Payment)

**குறிப்பு** : மேற்கூறப்பட்ட முறைமையின் ஊடாக கொடுப்பனவு செய்யப்படும் முறைமை தொடர்பில் ஆலோசனைகள் இணையத் தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(iii) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதென குறுந்தகவலொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் தகவலொன்றின் (Email) மூலம் அறியத்தரப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுப் பணமும் செலுத்த வேண்டியதுடன் பரீட்சை கட்டணத்தை குறைவாகவோ அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைமையின் மூலம் பரீட்சை கட்டணத்தை செலுத்தும் போது ஏற்படும் குறைபாடுகள் தொடர்பில் இலங்கை பரீட்சை திணைக்களம் பொறுப்பாக மாட்டாது.

(iv) பரீட்சைக்காக செலுத்தப்படும் பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீள செலுத்த/ வேறு பரீட்சைக்காக மாற்றப்படமாட்டாது.

(v) விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிப்பதினை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் ஏதேனும் பாதகமான நிலைமையொன்றினை விண்ணப்பதாரர்களினால் தாங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

(vi) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் நிபந்தனையின் மீது விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப்படிவங்களை சரியாக நிகழ்நிலையினூடாக சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களிடம் பரீட்சை ஆணையாளரால் நிகழ்நிலையினூடாக மட்டும் பரீட்சை அனுமதிப் பத்திரம் வெளியிடப்படும்.

(vii) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்ட உடன் அதனை குறிப்பிட்டு அறிவித்தலொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன், விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ் செய்தியினூடாகவும் அறிவிக்கப்படும். அறிவித்தல் வெளியிட்பட்ட பின்பும் தமது அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சாத்தியொருவர் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்படும்படி அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனம்சார் பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் விலாசத்தினை சரியாகக் குறிப்பிட்ட கோரிக்கை கடிதத்தினை இணைய அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பொருத்தமானது. அவ்வாறு விசாரிக்கும் போது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனும் தகவலொன்றை உறுதிப்படுத்துவதற்காக பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தின் புகைப்பட பிரதி மற்றும் பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் பிரதியை தம்வசம் வைத்திருப்பதும் பிரயோசனமானதாகும்.

(viii) பரீட்சை அனுமதி அட்டையைப் பரீட்சித்து பார்த்து திருத்தங்கள் இருப்பின் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பப்படிவத்திற்கு அமைய உரிய திருத்தங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் அல்லது நேர்முகப் பரீட்சையில் திருத்தங்கள் தொடர்பாக முன் வைக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(ix) பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையெழுத்தினை உறுதிப் படுத்தியிருத்தல் வேண்டும். ஏதேனும் அரசாங்க நிறுவனத்தினூடாக பரீட்சைக்கு விண்ணப் பிக்கும் விண்ணப்பதாரர் தமது கையெழுத்தினை தாபனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினாலும் அவ்வாறில்லையெனில் விண்ணப்பதாரர் தமது கையெழுத்தினை அரசாங்க பாடசாலையொன்றின் பிரதானியொருவரினால்/ ஓய்வு பெற்ற உத்தியோகத்தரினால், பிரிவின் கிராம உத்தியோகத்தரினால், சமாதான நீதவானால், சத்தியப்பிரமாண ஆணையாளரினால், சட்டத்தரணியால், பிரசித்த நொத்தாரிசினால், முப்படையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால், அரசாங்க அல்லது மாகாண அரசாங்கசேவையில்அல்லதுநிரந்தரபதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது பௌத்த மத விகாரையின் விகாராதிபதியினால் அல்லது

தலைமை மத குருவினால் அல்லது வேறு மத ஸ்தலத்திற்கு பொறுப்பாகவுள்ள அல்லது மத குருவாக குறிப்பிடத்தக்க நிலைமையை யுடைய ஒருவரினால் சான்றுரைப்படுத்தப்படல் வேண்டும்.

(x) பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப் படுவர். அவ்விதிமுறைகளை மீறினால், அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும். பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

13. **பரீட்சைக்கு அனுமதித்தல்:**

(அ) பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் களினால் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப் பட்ட அனுமதி அட்டையை, முதலில் அவ் மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றும் தினத்தில் அதன் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத பரீட்சாத்தி யொருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரரொருவர் தமக்கு நியமிக்கப் பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட் சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்ற வேண்டிய விதி முறைகள் இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

குறிப்பு : விண்ணப்பதாரரொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமை களைப் பூர்த்தி செய்துள்ளதாகக் ஏற்றுக் கொள்ளுதலாக கருதப்பட மாட்டாது.

14. **பரீட்சார்த்திகளின் அடையாளம் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் விதத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்:

I. தேசிய ஆளடையாள அட்டை;
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வாறு முகத்தினை மறைக்காது மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்காக இருகாதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். மேலும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்ட பத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் முகத்தையும், இரு காதுகளையும் மறைக்காது இருத்தல் வேண்டும்.

15. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

16. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு ஏற்படின், அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

என்.யு. நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026, பெப்புருவரி 09.

**அட்டவணை - I**

**மாவட்டப் பெயர்ப்பட்டியல் மற்றும் இலக்கம்**

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |

| *மாவட்டம்* | *மாவட்ட இலக்கம்* |
|---|---|
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலநறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

**அட்டவணை - II**

**பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்படும் நகரங்கள்**

| | *மாவட்டம்* | *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | கொட்டாஞ்சேனை | 01 |
| | | மருதானை | 02 |
| | | பொரளை | 03 |
| | | கறுவாத்தோட்டம் | 04 |
| | | பம்பலப்பிட்டி | 05 |
| | | ஹெவ்லொக்டவுன் | 06 |
| | | நுகேகொடை | 07 |
| | | மொறட்டுவை | 08 |
| | | பிலியந்தலை | 09 |
| | | ஹோமாகம | 10 |
| | | மகரகம | 11 |
| | | ஹன்வெல்ல | 12 |
| | | அவிசாவளை | 13 |
| 02 | கம்பஹா | நீர்கொழும்பு | 14 |
| | | மினுவாங்கொடை | 15 |
| | | திவுலப்பிட்டிய | 16 |
| | | வேயங்கொடை | 17 |
| | | கம்பஹா | 18 |
| | | ஜா-எல | 19 |
| | | வத்தளை | 20 |
| | | களனி | 21 |
| | | தொம்பே | 22 |
| 03 | களுத்துறை | ஹொரண | 23 |
| | | பாணந்துறை | 24 |
| | | களுத்துறை | 25 |
| | | மத்துகம | 26 |
| | | அளுத்கமை | 27 |
| 04 | கண்டி | கண்டி | 28 |
| | | கடுகஸ்தொட்டை | 29 |
| | | தெல்தெனிய | 30 |
| | | வத்தேகம | 31 |
| | | நுகவெல | 32 |
| | | கலகெதர | 33 |
| | | கம்பளை | 34 |
| 05 | மாத்தளை | மாத்தளை | 35 |
| | | கலேவெல | 36 |
| | | நாவுல | 37 |
| | | லக்கல -பல்லேகம | 38 |

| | *மாவட்டம்* | *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|---|---|
| 06 | நுவரெலியா | ஹந்துனுவெவ | 39 |
| | | நுவரெலியா | 40 |
| | | வத்துமுல்ல | 41 |
| | | ஹற்றன் | 42 |
| | | கினிகத்தேனை | 43 |
| 07 | காலி | அம்பலாங்கொடை | 44 |
| | | காலி | 45 |
| | | பத்தேகம | 46 |
| 08 | மாத்தறை | வெலிகம | 47 |
| | | மாத்தறை | 48 |
| | | கம்புருபிட்டிய | 49 |
| | | ஹக்மனை | 50 |
| | | தெய்யந்தர | 51 |
| | | திக்வெல்லை | 52 |
| | | அக்குரஸ்ஸ | 53 |
| | | கொட்டபொல | 54 |
| 09 | அம்பாந்தோட்டை | பெலியத்த | 55 |
| | | வலஸ்முல்ல | 56 |
| | | வீரகெட்டிய | 57 |
| | | தங்காலை | 58 |
| | | அம்பலாந்தோட்டை | 59 |
| | | அம்பாந்தோட்டை | 60 |
| | | திஸ்ஸமஹாராமய | 61 |
| 10 | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | 62 |
| | | யாழ்ப்பாணம் | 63 |
| | | தெல்லிப்பழை | 64 |
| | | பருத்தித்துறை | 65 |
| 11 | மன்னார் | மன்னார் | 66 |
| | | முருங்கன் | 67 |
| 12 | வவுனியா | வவுனியா | 68 |
| 13 | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | 69 |
| 14 | கிளிநொச்சி | கிளிநொச்சி | 70 |
| | | பளை | 71 |
| 15 | மட்டக்களப்பு | மட்டக்களப்பு | 72 |
| | | ஏறாவூர் | 73 |
| | | காத்தான்குடி | 74 |
| 16 | அம்பாறை | அம்பாறை | 75 |
| | | சேரங்கடை | 76 |
| | | கல்முனை | 77 |
| | | அக்கரைப்பற்று | 78 |
| | | சம்மாந்துறை | 79 |

| | *மாவட்டம்* | *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|---|---|
| 17 | திருகோணமலை | கந்தளாய் | 80 |
| | | திருகோணமலை | 81 |
| | | மூதூர் | 82 |
| | | பதவி பராக்கிரமபுர | 83 |
| | | கிண்ணியா | 84 |
| 18 | குருநாகல் | குளியாப்பிட்டிய | 85 |
| | | பிங்கிரிய | 86 |
| | | நாரம்மல | 87 |
| | | பொல்கஹவெல | 88 |
| | | குருநாகல் | 89 |
| | | இப்பாகமுவ | 90 |
| | | தொடம்கஸ்லந்த | 91 |
| | | மொரத்திஹ | 92 |
| | | நிக்கவெரட்டிய | 93 |
| | | மஹவ | 94 |
| 19 | புத்தளம் | வென்னப்புவ | 95 |
| | | மாதம்பை | 96 |
| | | சிலாபம் | 97 |
| | | புத்தளம் | 98 |
| 20 | அநுராதபுரம் | மதவாச்சி | 99 |
| | | கெக்கிராவ | 100 |
| | | அநுராதபுரம் | 101 |
| | | கலென்பிந்துனுவெவ | 102 |
| | | கஹட்டகஸ்திகிலிய | 103 |
| 21 | பொலநறுவை | பொலநறுவை | 104 |
| | | ஹிங்குராக்கொடை | 105 |
| 22 | பதுளை | பண்டாரவளை | 106 |
| | | வெலிமடை | 107 |
| | | பதுளை | 108 |
| | | பஸ்சரை | 109 |
| | | மஹியங்கனை | 110 |
| | | கிராந்துருகோட்டே | 111 |
| | | ஹசலக்க | 112 |
| 23 | மொணராகலை | பிபிலை | 113 |
| | | மொணராகலை | 114 |
| | | வெல்லவாய | 115 |
| 24 | இரத்தினபுரி | எஹெலியகொட | 116 |
| | | இரத்தினபுரி | 117 |
| | | பெல்மடுல | 118 |
| | | பலங்கொடை | 119 |
| | | கலவானை | 120 |
| | | எம்பிலிபிட்டிய | 121 |
| 25 | கேகாலை | கேகாலை | 122 |
| | | ரம்புக்கனை | 123 |
| | | மாவனல்லை | 124 |
| | | ருவன்வெல்ல | 125 |

2-211

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.